*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# முதலாம் வேற்றுமையும் அதன் பயனிலைகளும்

**சு.வினோதா**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*மொழியில் இடம்பெறும் சொற்களை முதன்மைச்சொற்கள் துணைமைச் சொற்கள் என இரண்டாகப் பிரிப்பர். அவ் இரண்டனுள் இடைச்சொற்கள் அனைத்தும் துணைமைச்சொற்களாக அமைவன. இடைச்சொற்களுள் தொடர்நிலையை எட்ட துணை செய்வன வேற்றுமை உருபுகளே. எட்டு வேற்றுமைகளுள் ஆறு வேற்றுமைகள் பெயர்ச்சொற்களுக்குப் பின் உருபுகளாய் அமைந்து பொருள் வேற்றுமைக்கு உதவும். ஆனால் முதலாம் வேற்றுமை மட்டும் வாக்கியத்தின் எழுவாயாக அமைந்து பொருள் வேற்றுமையை உணர்த்தும். அவ் எழுவாய் வேற்றுமை பொருள் வேற்றுமை செய்யும் தன்மையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.*

**எழுவாய் - ஒரு பார்வை:**

ஒரு வாக்கியத்தில் செயல் நிகழ்வதற்குக் காரணமாக அமையும் காரணியே எழுவாயாகும். பயனிலையுடன் திணை பால் எண் இட உறவு கொண்டுள்ள பெயரே அதன் எழுவாய் ஆகும். எழுவாய் வேற்றுமைக்குத் தனியே ஓர் உருபு கிடையாது. திரிபு இல்லாத நிலையில் வரும் பெயர் எழுவாயாகச் செயல்படுகிறது. இது எண்ணிக்கை அடிப்படையில் முதல் வேற்றுமை என்றும் பெயர் நிலையில் எழுவாய் வேற்றுமை என்றும் சுட்டப்படுகின்றது. திரிபடையாத பெயர்ச் சொற்களே எழுவாயாகக் கொள்ளப் படுகின்றது.

**முதலாம் வேற்றுமை - ஒரு பார்வை:**

ஒரு வாக்கியத்தில் அமையும் எழுவாய் பயனிலை கொண்டு முடியும். அதிலும் குறிப்பாக எழுவாயாக அமையும் முதலாம் வேற்றுமை ஆறு வகைப் பயனிலைகளைக் கொண்டு முடியும். இதனைத் தொல்காப்பியர்

"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே" – தொல் - சொல் - வேற் - 66

என்னும் நூற்பா உணர்த்துகின்றது.

முதலாம் வேற்றுமையில் இடம்பெறும் பெயர்ச்சொற்கள் பிற வேற்றுமைஉருபுகளைஏற்காது. விளி கொள்ளாது. பயனிலைகளை மட்டும் ஏற்கும். முதலாம் வேற்றுமையானது அறுவகைப்பட்ட பயனிலையையும் தன்கண் தோன்றச் செய்யும்

**எழுவாய், பெயர்ச்சொல் - வேறுபாடு**

வேற்றுமைகள் எட்டு வகைப்படும். அவற்றுள் முதலாம் வேற்றுமை என்பது எழுவாய் வேற்றுமை. ஒரு வாக்கியத்தில் எழுவாயானது செயப்படு பொருள் கொண்டு பயனிலையை உருவாக்குகின்றது. இவ் எழுவாயைத் தொல்காப்பியர் வேற்றுமையாகக் கொண்டு அது வெளிப்படுத்தும் பயனிலைகளையும் பட்டயலிட்டுள்ளார். எழுவாய்கள் அனைத்தும் பெயர்ச்சொற்களே. ஆனால், இவை பிற வேற்றுமை உருபுகளையோ விளியையோ ஏற்பதில்லை. இந்நிலையே எழுவாய் வேற்றுமைக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையே அமைந்துள்ள வேறுபாடுகள் ஆகும்.

**எழுவாய் ஏற்கும் பயனிலைகள்:**

எழுவாய் வேற்றுமையது பயனாகிய

நிலையைப் பயனிலை என்பார் தொல்காப்பியர். "தன்னை முடித்தற்குப் பின் வரும் சொல்லின் பொருண்மையைத் தான் அவாவி நிற்கும் வேறுபாட்டைப் பயனிலை என்றார்" என்பார் சேனாவரையார். எழுவாய் ஆறு வகைப்பயனிலைகளை ஏற்கும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். இதனை

"பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்
பண்பு கொள வருதல் பெயர் கொள வருதல் என்று
அன்றி அனைத்தும் பெயர்ப்பயனிலையே" தொல் - சொல் - வேற் - 67

என்னும் நூற்பா உணர்த்துகின்றது. அவ்வாறாவன

- **பொருண்மை சுட்டல்**: எழுவாயின் இயல்பைக் குறிக்கும். பொருள் தன்மையது உண்மைத் தன்மையைச் சுட்டி நிற்க வருதல். சான்று: **ஆ உண்டு**
- **வியங்கொள வருதல்**: எழுவாய் தான் ஏவலைக் கொள்ள வருதல் சான்று: **ஆ செல்க**
- **வினைநிலை உரைத்தல்:** எழுவாய் தனது தொழிலினைச் சொல்ல வருதல் சான்று: **ஆ கிடந்தது**
- **வினாவிற்கேற்றல்: எழுவாய்** தான் வினாவிற்குப் பொருந்தி வருதல். சான்று: **ஆ யாது?**
- **பண்பு கொள வருதல்:** எழுவாய் தனது பண்பினைத் தான் கொள்ள வருதல் சான்று: **ஆ கரிது**
- **பெயர் கொள வருதல்:** எழுவாய் தான் பெயரைக் கொண்டு முடிய வருதல் சான்று: **ஆ பல**

**வினைநிலை உரைத்தலுக்கும் வியங்கொள வருதலுக்கும் இடையிலான வேறுபாடு:**

எழுவாய் ஏற்கும் பயனிலைகளுள் வினைநிலை உரைத்தலுக்கும் வியங்கொள வருதலுக்கும் இடையே சிறிய அளவிலான வேறுபாடு மட்டுமே காணப்படுகின்றது. வினைநிலை உரைத்தல் என்பது எழுவாயின் தொழிலை உணர்த்தும்.

சான்று : ஆ கிடந்தது

வியங்கொள வருதல் என்பது தன்கண் தொழில் நிகழ்வதாக எழுவாய் ஏவப்படுதல்.

சான்று : ஆ செல்க.

- ➢ வினைநலை உரைத்தலும் பண்பு கொள வருதலும் பெயர் கொள வருதலும் **முடிக்கும் சொல்லாகவும் முடிக்கப்படும் சொல்லாகவும்** அமையும்.
- ➢ வியங்கோள், வினா, வினைக்குறிப்பு: முடிக்கும் சொல்லாய் மட்டுமே வரும்

**தோன்று நிலைகள்:**

எழுவாய் வேற்றுமை தோன்றும் நிலைகள் கீழ்வருமாறு அமையும்.

- **பண்பு ஒட்டு ஆகாது விட்டிசைத்து நின்று மற்றோர் எழுவாயின் பயனிலையோடு தானும் பயனிலை கோடல்** - 'ஆயன் சாத்தன் வந்தான்'
- **வினைப் பின்னும் நிற்றல்:** ஆயன் வந்தான் சாத்தன்
- **பயனிலைக்கு அடையாய் நிற்றல்:** சாத்தன் தலைவன் ஆயினான்
- **சினைவினை முதற்கு ஏற்றிக் கூறல்:** சாத்தன் கண் நல்லன்
- **பண்பின் தொழிலைப் பண்படைந்த பொருட்கு ஏற்றிக் கூறல்: இம்மணி நிறம் நன்று.**
- **தொழிலின் தொழிலைத் தொழிலடைந்த பொருட்கு ஏற்றிக் கூறல்:** இக்குதிரை நடை நன்று
- **இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்திற்கு ஏற்றிக் கூறல்:** இவ்யாறு நீர் ஒழுகும்
- **எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த பெயர் தானும் எழுவாயாய்ப் பயனிலை கோடல்:**
  இறைவன் அருளல் எம் உயிர் காக்கும்
- **உருபு ஏற்றல்:**
  இறைவன் அருளலின் யாம் உயிர் வாழ்தும்.
- **முன்னும் பின்னும் பயனிலை ஏற்றலும்:** ஆ செல்க, செல்க ஆ.

**தொகைப் பெயரும் பயனிலை கொள்ளும்:**

தொகாநிலைப் பெயரேயன்றித் தொகை நிலைப் பெயரும் பயனிலை கொள்ளும். எழுவாய் வேற்றுமையாய் நின்று பயனிலை கொள்ளுமிடத்து பெயரும் பெயர் தொக்க தொகையும் அமையும். அவை

- பெயரொடு பெயர் தொக்கன
- பெயரொடு வினை தொக்கன

என்னும் இரண்டு நிலைகளில் அமையும்.

**பெயரொடு பெயர் தொக்கன பயனிலை கொள்ளும்**

சான்று: யானைக் கோடு கிடந்தது.
மதிமுகம் வெயர்த்தது
கொல் யானை நின்றது
கருங்குதிரை ஓடிற்று
உவாஅப் பதினான்கு
பொற்றொடி வந்தாள்

**பெயரொடு வினை தொக்கன பயனிலை கொள்ளாது**

எழுவாயோடு வினைச்சொற்கள் தொக்கி வரும் சூழல்களில் அவ் எழுவாய்கள் பயனிலை கொள்ளாது.

**சான்று:** நிலம் கிடந்தான்

குன்றத்து இருந்தான் - இங்கு எழுவாய் பயனிலை கொள்ளாது முற்றாய் நிற்கும்.

**தொகுப்புரை:**

1. எழுவாயாக அமையும் முதலாம் வேற்றுமை ஆறு வகைப் பயனிலைகளைக் கொண்டு முடியும்.
2. முதலாம் வேற்றுமையில் இடம்பெறும் பெயர்ச்சொற்கள் பிற வேற்றுமை உருபுகளை ஏற்காது. விளி கொள்ளாது.
3. எழுவாய் ஆறு வகைப்பயனிலைகளை ஏற்கும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.
4. எழுவாய் ஏற்கும் பயனிலைகளுள் வினைநிலை உரைத்தலுக்கும் வியங்கொள வருதலுக்கும் இடையே சிறிய அளவிலான வேறுபாடு மட்டுமே காணப்படுகின்றது.
5. வினைநிலை உரைத்தல் என்பது எழுவாயின் தொழிலை உணர்த்தும். வியங்கொள வருதல் என்பது தன்கண் தொழில் நிகழ்வதாக எழுவாய் ஏவப்படுதல்.
6. எழுவாயோடு வினைச்சொற்கள் தொக்கி வரும் சூழல்களில் அவ் எழுவாய்கள் பயனிலை கொள்ளாது.